சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

OS 174/2019

10.02.2026.

DW - 1

பி.வா.சா.வ. ராமலிங்கம், த/பெ.காசிநாதன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

எனது அப்பா பெயர் காசிநாதன். எனது அப்பாவுடன் பிறந்தவர் எத்தனை நபர்கள் என்றால் - 8 நபர்கள். ஆண்கள் 3 பேர். கோவிந்தராஜ், சிவமணி மற்றும் காசிநாதன். எனது அப்பா முதற்கொண்டு அனைவரும் இறந்துவிட்டார்கள் என்றால் - கோவிந்தராஜ் மனைவியான 1ம் பிரதிவாதி மட்டும் உயிருடன் உள்ளார். எனது அப்பாவின் அம்மாவான எனது பாட்டி பெயர் என்னவென்றால் - செங்கம்மாள். செங்கம்மாளின் கணவர் பெயர் மாரியப்பன். செங்கம்மாள் 1981ம் வருடம் இறந்தார். செங்கம்மாள் இறந்துவோவதற்கு முன்பு யாருக்கும் பத்திரம் எழுதி வைக்கவில்லை என்றால் - சரிதான். தாவா சொத்து அனைத்தும் செங்கம்மாளுக்கு சொந்தமான சொத்துக்கள் என்றால் - சரியல்ல. மாரியப்பனுக்கு சொந்தமானது. மாரியப்பனுக்கு சொந்தமான சொத்துக்கள் என்பதற்கு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் - இல்லை. மாரியப்பனுக்கு என்னென்ன சொத்துக்கள் இருந்தன என்று குறிப்பிட்டு சர்வே எண்கள் உட்பட சொல்ல முடியுமா என்றால் - முடியும். ஒரே சர்வே எண். 207 பிஏ, இரண்டு வீடுகள் மற்றும் 3 கடைகள் உள்ளது. மாடி வீட்டில் யார் குடியிருக்கிறார்கள் என்றால் - பாலகிருஷ்ணன் மற்றும் சிவக்குமார் குடியிருந்து வருகிறார்கள். மேற்படி மாடி வீடுகள் தாவா சொத்திற்கு கிழக்கு பக்கம் உள்ளது. மாடி உள்ளது அனைத்தும் மாரியப்பனுக்கு சொந்தமான சொத்துக்களா என்றால் - ஆமாம். மாரியப்பன் உயிருடன் இருந்தபோதே பிரித்துக்கொடுத்துவிட்டார்களா என்றால் - வாய்மொழியாக பிரித்துக்கொண்டார்கள். தாவா சொத்தை மட்டும்தான் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் - அதனையும் பிரித்துக்கொண்டார்கள். வாய்மொழியாக பிரித்துக்கொண்டோம். வாய்மொழியாக பிரித்துக்கொண்டதற்கு எழுத்து மூலமாக எழுதிக்கொண்டோமா என்றால் - எழுதிக்கொண்டோம். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் 3 ஓட்டு வீடுகள் உள்ளன. கிழக்குபக்கம் உள்ள வீட்டில் யார் இருக்கிறார்கள் என்றால் - நான் இருக்கிறேன். நடுவில் உள்ள வீட்டில் தற்போது ரவி குடியிருக்கிறார்கள். மேற்கில் உள்ள வீட்டில் யார் இருக்கிறார்கள் என்றால் -செங்கம்மாள் மற்றும் அவரது பிள்ளைகள் இருக்கிறார்கள். 3 வீடுகளுக்கும் ஒரே மேற்கூரை என்றால் - சரிதான். தனித்தனி கதவுகள் என்றால் - சரிதான். 60 வருடங்களுக்கு மேற்பட்ட பழமையான வீடுகள். செங்கம்மாள் உயிருடன் இருந்த காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் என்றால் - சரிதான். எங்கள் வீடுகளுக்கு எதிர்த்தாற்போல் காலி மனை உள்ளது என்றால் - முன்னாலும் பின்னாலும் உள்ளது. அவைகள் யார் யார் குடியிருக்கிறார்களோ அவரவர் அனுபவத்தில் பழகி வருகிறோம் என்றால் - சரிதான். நான் இருக்கும் இடத்திற்கு எதிரே காம்பவுண்ட் கட்டி விட்டேன் என்றால் - ஆமாம். 30 வருடங்களுக்கு முன்பு கட்டிவிட்டேன். சிவமணி மற்றும் ரவி ஆகியோர்கள் கொல்லைப்புறம் செல்ல என்றால் எனது வீட்டு பக்கமாக வரவேண்டும் என்றால் - நேராகதான் செல்வார். தாவா சொத்தை

பொறுத்தவரையில் எனது அப்பா காலத்திலிருந்து பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரம் கிடையாது என்றால் - சரிதான். வீடு, எதிர்த்தாற்போல் உள்ள கொல்லைகளை 3 பாகமாக பிரித்துக்கொள்வதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் - ஏற்கனவே பிரித்துதான் உள்ளது. நீதிமன்றம் மூலம் பிரித்துக்கொள்வதில் ஆட்சேபணை உள்ளதா என்றால் - இல்லை. நான் சொல்வதுபோன்று செங்கம்மாள்-மாரியப்பனுக்கு மற்ற வாரிசுகள் உள்ளார்கள் என்றும் அவர்களை வழக்கில் சேர்க்கவேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளனோ என்றால் - இல்லை. எந்தெந்த சர்வே எண்கள் விடுப்பட்டு உள்ளது என்றும் அதனை இந்த வழக்கில் சேர்க்கவேண்டும் என்றும் நீதிமன்றத்தில் மனு கொடுத்துள்ளேனா என்றால் - இல்லை.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,

சார்பு நீதிபதி

மன்னார்குடி.